**கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது)-ன்**
**செயல்முறை ஆணை**
**பிறப்பிப்பவர்:திருமதி.மு.கோகிலா.பி.இ.,**

ந.க.எண்.21736/2021/அ6 நாள்:08.07.2024

பொருள் : கருணை அடிப்படையில் பணி நியமனம் - கோயம்புத்தூர் மாவட்ட வருவாய் அலகு - பொள்ளாச்சி தமிழ்நாடு வாணிபக்கழக கிடங்கு மேலாளர்/வட்டாட்சியர் ஜெயராஜ்(திரு) என்பவர் 09.09.2021 அன்று பணியிடையில் காலமானது - அவரது மகள் நாகின்ஸ்ரீ(செல்வி) என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராக பணி நியமனம் வழங்கப்பட்டது - பணிவரன்முறை செய்து ஆணையிடல்.

படிக்கப்பட்டவை :
1. செல்வி (திருமதி) என்பவரின் மனு நாள்:04.02.2022
2. நாகின்ஸ்ரீ (செல்வி) என்பவரின் மனு நாள்:04.02.2022
3. கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) அவர்களின் செயல்முறை ஆணைகள் 115/2022/அ7 நாள்: 05.08.2022
4. அரசாணை(நிலை) எண்.33, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (க்யூ-1)துறை, நாள்:08.03.2023
5. கூடுதல் தலைமைச் செயலர்/வருவாய் நிருவாக ஆணையர், வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகம், சென்னை அவர்களின் கடித எண்.ஆ.கு.3/4600/2024, நாள்.20.02.2024 மற்றும் 28.02.2024.

*****

**ஆணை:**

கோயம்புத்தூர் மாவட்ட வருவாய் அலகில், வட்டாட்சியர் நிலையில், பொள்ளாச்சியில் தமிழ்நாடு வாணிபக்கழக கிடங்கு மேலாளராகப் பணிபுரிந்து, பணியிடையே கடந்த 09.09.2021 அன்று திரு.ஜெயராஜ் என்பவர் காலமானதைத் தொடர்ந்து, அவருடைய மகள் செல்வி.நாகின்ஸ்ரீ என்பவருக்கு பார்வை 3ல் படிக்கப்பட்ட கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களின் செயல்முறை ஆணையின்படி, கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டு, தனியர் 25.08.2022 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார். பார்வை 4, 5இல் படிக்கப்பட்ட அரசாணை மற்றும் கடிதங்களின்படி, தனியர் பணியில் இணைந்த நாளான 25.08.2022 முற்பகல் முதல் தனியரின் பணி வரன்முறை செய்து இதன்மூலம் ஆணையிடப்படுகிறது.

மேற்காண், ஆணை விவரம் குறித்து தனியரின் பணிப்பதிவேட்டில் தக்க பதிவுகள் மேற்கொள்ளுமாறும், பணிவரன்முறை முன்தேதியிட்டு செய்யப்பட்டதால் ஆண்டு ஊதிய உயர்வு, ஊதிய நிலுவை ஏதுமிருப்பின் அதனை பெற்று வழங்குமாறும் பொள்ளாச்சி வட்டாட்சியருக்கு ஆணையிடப்படுகிறது.

மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர் (பொது),
கோயம்புத்தூர்

**பெறுநர்:**
செல்வி.நாகின்ஸ்ரீ,
இளநிலை வருவாய் ஆய்வாளர்,
வட்டாட்சியர் அலுவலகம், பொள்ளாச்சி.

**நகல்:**
1. வட்டாட்சியர், பொள்ளாச்சி
2. அ7 இருக்கைக்கு